**மூன்று மத்திய ஒதுக்கீட்டுக் கணக்குகளில் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஈஎஸ்டிபீ) - 2013**

---

கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ஈஎஸ்டிபீ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் iv ஆம் உறுப்புரைகளின் 4.04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய ரீதியில் கல்வி அமைச்சு (எம்ஓஈ) கல்வித் திணைக்களம் (டிஓஈ) மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (டிஓஈபீ) என்பவற்றாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கை தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கைகளின்படி, நாட்டில் பொது கல்வித்துறை எதிர் நோக்கும் சவால்களை உரைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி சட்டகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (ஈஎஸ்டிஎவ்பீ) 2013 – 2017 ஐ அமுலாக்குவதற்கு நிதி ஆதரவை வழங்குவதற்கு கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. ஈஎஸ்டீபீயின் அமுலாக்கும் முகவர் கல்வி அமைச்சாகும். ஈஎஸ்டிஎவ்பீ யின்படி, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்விக்கும் சமத்துவமான அணுகுதலை அதிகரித்தல், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்வியின் ஆட்சி மற்றும் சேவை விநியோகத்தைப் பயன்படுத்துதல் என்பன நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனாகும். நிகழ்ச்சித் திட்டம் நடவடிக்கைகளை 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

கல்வி அமைச்சு (எம்ஓஈ), பரீட்சைத் திணைக்களம் (டிஓஈ) மற்றும் கல்வித் வெளியீட்டுத் திணைக்களம் (டிஓஈபீ) என்பவற்றின் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் ஒன்றிணைக்கும் இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகளை தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தலும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான நிதிப் பிரமாணங்கள் மற்றும் பொதுத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் என்பவற்றை தெரிவு செய்து பயன்படுத்துவதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகளின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு அறிக்கைகளிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின்

ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்படடனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2012 நவம்பர் 26 ஆம் திகதிய 227/2012 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபம் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஏற்றுக் கொள்ளத்தக்க கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகரமாக இறைமை செய்யப்பட்டதா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இனங்கப்பட்டிருந்தனவா என்பதுவுமாகும்.

## 3. அபிப்பிராயம்

------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிரவும்

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி அமைச்சு தொடர்பான 2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் முதலாம் பட்டோலையின் தலைப்பு 126 இற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2012 நொவம்பர் 26 ஆம் திகதிய 227/2012 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபம் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் திறைசேரி கணணி அச்சுத்தாள்கள், ஆண்டு மதிப்பீடுகள் மற்றும் கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அந்த திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய

வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கபட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமனவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

## 4.1 நிதிசார் செயலாற்றல்

ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின்படி, சகல மூலகங்களிலிருந்தும் கல்வித்துறைக்காக மீளாய்வாண்டில் ரூபா 38,336,126,328 கூட்டு மொத்த தொகையான செலவினம் செய்யப்பட்டது. கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றின் 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் சமர்ப்பிக்கப்பட்டவாறு சகல மூலங்களின் நிதியிலிருந்தும் செய்யப்பட்ட செலவினத்தின் பொழிப்பை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| விபரம் | மீளாய்வாண்டில் சகல மூலங்களின் நிதிகளிலிருந்து செய்யப்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | |
| - ஆளுக்குரிய வேதனங்கள் | 20,009,975,311 |
| - ஏனையவை | 10,683,336,542 |
| மூலதனச் செலவினம் | 7,642,814,475 |
| | 38,336,126,328 |

## 4.2 வைப்புக் கணக்கு

பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கியினால் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பேணப்பட்ட 4201 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் தொழிற்பாடுகள் பொழிப்பாக்கி கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப வைப்பு | இல்லை | இல்லை |
| கூட்டு: மீள் நிரம்பல்கள் | 40,184,329 | 5,308,209,189 |
| கழி: பற்றுதல்கள் | 40,184,329 | 5,308,209,189 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவின் படி, ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஏற்றுக்கொள்ளக் கூடிய கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல மூலங்களின் நிதிகளிலிருந்து கல்வித்துறைக்காக கல்வி அமைச்சு பரீட்சை திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட ரூபா38,336,126,328 கூட்டுமொத்த தொகையான மொத்தச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 நிதிகளின் பயன்பாடு

ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகள் மற்றும் கணக்காய்விற்கு தரப்பட்ட ஏனைய தகவல்களின்படி, ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த கடன் பெறுகைகள் மற்றும் அதிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் என்பன புறம்பாக வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் எனபவற்றின் வருடாந்த மதிப்பீடுகளில்

மேற்கொள்ளப்பட்ட கடன் பெறுகைகளின் பயன்பாட்டிற்கான ஒதுக்கீடுகள் புறம்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சம்பந்த நடவடிக்கைகளில் கடன்பெறுனர்கள் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது

### 5.3 பௌதீக செயலாற்றல்

----------------------------------

இந்த அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல நிதிகளின் மூலங்களிலிருந்து கல்வித்துறைக்காக கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் செய்யப்பட்ட ரூபா 38,336,126,328 கூட்டு மொத்தத் தொகையான மொத்த செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மாகாணக் கல்வித் திணைக்களங்களின் தொழிற்பாடு தொடர்பான முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்களில் சில கீழ்வருமாறு தரப்படுகின்றன.

(அ) கல்வி அமைச்சிற்காக மீளாய்வாண்டில் ரூபா 37,358,905,000 தொகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதில் ரூபா 36,200,228,381 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்து ஆகையால் மொத்த சேமிப்புக்கள் ரூபா 1,158,676,619 தொகையானதுடன் அதில் மூலதனச் செலவிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் எஞ்சியிருந்த தொகை ரூபா 939,912,832 ஆகும். பல்வேறு மூலதன செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட முழு ஒதுக்கீடுகளும் முறையான திட்டமின்மை, முன்னுரிமை அடிப்படையில் தேவைகள் இனங்காணப்பட்டிருக்காமை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளை விடுவித்தலின் தாமதங்கள் மற்றும் கொள்வனவு செயன்முறைகளைப் பூர்த்தி செய்வதில் தாமதங்கள் போன்ற பல காரணங்களால் எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 2,847,579 தொகையான யூஎன்எஸ்சீஓ மானியத்தின் பயன்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ரூபா 3,347,579 தொகையான மேலதிக ஒதுக்கீடு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அம் மானியமானது மீளாய்வாண்டில் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2013 திசெம்பர் 27 இல் மீளச் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. மீளச் செலுத்தப்பட்ட நிதியின் கணக்கீட்டுப் பதிவுகள்

தவறாக சம்பந்தப்பட்ட செலவினத் தலைப்புக்களிற்கு செலவுப் பதிவு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 94 இன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் ஏற்பட்ட கடப்பாடுகள் மற்றும் செய்யப்பட்ட செலவுகள் என்பன ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழான செலவினத்தை ஈடுசெய்வதற்கு அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சக் கூடாது. இருந்தபோதிலும் 34 செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடுகளை விஞ்சிய மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறான கடப்பாடுகள் ரூபா 5,243,994,512 தொகையாகும்.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் 859 விஞ்ஞான ஆய்வு கூடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,364,105,710 கூட்டுமொத்தத் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 380 விஞ்ஞான ஆய்வு கூடங்கள் மட்டும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,106,338,371 கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(உ) பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி மேம்பாட்டு உத்தேசத் திட்டம் 2012 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட்டிருந்தததுடன் ரூபா 162,400,000 தொகை உத்தேசத் திட்டத்தின் 01 ஆம் கட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 50 தேசிய பாடசாலைகள் மற்றும் 359 மாகாண பாடசாலைகளிற்காக முன்னைய ஆண்டில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் உத்தேசத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மேலும் 132 தேசிய பாடசாலைகள் மற்றும் 466 மாகாணப் பாடசாலைகளுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 89,550,000 ஆன மானியம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றங்களை, செயற்திட்டப் பிரேரனைகள் காலரீதியான முன்னேற்ற அறிக்கைகள் முதலியன பாடசாலை அதிபர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியவில்லை.

(ஊ) ரூபா 199,285,500 பெறுமதியான தளபாடங்கள் சம்பந்தப்பட்ட கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்கு முன்னர் 150 மகிந்தோதய தொழில்நுட்ப பீடங்களிற்காக 06 ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் அந்த தளபாடங்கள் போதிய பாதுகாப்பு இல்லாமலும் பாடசாலைகளின் நாளாந்த நடவடிக்கைகளிற்கு இடையூறாகவும் பாடசாலைகளின் வளாகத்தினுல் வைக்கப்பட்டிருந்தன. மேலும், தளபாடங்களை

வழங்குவதற்கான ஒப்பந்தங்களில் சில உடன்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கோ அல்லது ஒப்பந்த காலத்தை நீடிக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக ரூபா 10,332,314 ஆன பெறுமதியுடைய தளபாடங்கள் 17 மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வு கூடங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய கட்டிடங்களின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டமையால் அப்பொருட்கள் பாடசாலை வளாகத்தினுல் செயற்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

(எ) "பாடசாலை வலையமைப்பு" என்று பெயரிடப்பட்ட இணையதள வலையமைப்பு அணுகும் வசதிகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சினால் பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 37,090,000 கிரயத்தில் ஒரு தனியார் கம்பனி மற்றும் ஒரு அரச கூட்டுத்தாபனம் என்பவற்றின உதவியுடன் அந்த வலையமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 1,724 பாடசாலைகள் இணைக்கப்பட்டிருந்தன. இந்த நோக்கங்களிற்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 579,140,248 தொகையான பராமரிப்புக் கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 222,327,173 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. பாடசாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, வலையமைப்பின் குறைந்த இயலளவு காரணமாக 414 பாடசாலைகளிற்கு இந்த வசதி கிடைத்திருக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது மேலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 16,122,312 கிரயத்தில் நிறுவப்பட்ட கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையும் "பாடசாலை வலையமைப்பு" வசதி இல்லாமல் செய்யப்பட்டமையால் பாடசாலைகளினால் பயன்படுத்தப்படாது விடப்பட்டிருந்தன.

(ஏ) மேல் மாகாணத்தில் மாகாணங்களின் விசேட தேவைகளிற்காக தேசிய தொடர்பாடல் நிலையமொன்றை நிறுவுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 56,000,000 ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அது குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கீட்டில் ரூபா 8,694,366 தொகை வேறு நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ) அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு வகுப்பறைக்கான மாணவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 42 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 31 தேசிய பாடசாலைகளில் தரம் 5 வகுப்புக்களின் கணக்காய்வு மாதிரிப் பரிசோதனையில் குறித்த எல்லையை விஞ்சி 1250 மாணவர்களிலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) கல்வி அமைச்சினால் கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி பல்வேறு பாடங்களிற்காக 2096 ஆசிரியர் பதவிக்கான வெற்றிடங்களிருந்த அதே நேரம் ஏனைய வேறு பாடங்களுக்காக 5078 ஆசிரிய பதவிகள் மேலதிகமாக இருந்தன. ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்களின் தேசிய கொள்கையைப் முறையாக அமுலாக்கப்படத் தவறியதன் காரணமாக பாடசாலைகளிற்கு ஆசிரியர்களை பணியிலமர்த்துவதில் சமனற்ற தன்மை இருந்ததாக கணக்காய்வில் வெளிப்பட்டது.

(ஓ) விசேட தேவைகளை உடைய மாணவர்களுக்கான டிப்ளோமா தகைமையுடைய ஆசிரியர்களிற்காக 476 பதவிகள் வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், விசேட தேவைகளைக் கொண்ட 1145 மாணவர்களைக் கொண்ட 128 பாடசாலைகளிற்கு அத்தகைய தகைமைகளை உடைய ஆசிரியர்களெவரும் இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. மேலும், விசேட தேவைகளையுடைய மாணவர்களின் கற்பித்தலுக்கான தகைமைகளைக் கொண்ட 176 ஆசிரியர்கள், விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களில்லாத வேறு 162 பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஔ) மாணவர்கள் தொடர்பான உரிய தகவல்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களால் சமர்ப்பிக்கத் தவறியமையை காரணமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறையிலுள்ள 03 தேசிய பாடசாலைகளிற்கு அனுமதிக்கப்பட்டிருந்த 620 மாணவர்களிற்கு ரூபா 1,476,000 கூட்டுத்தொகையான மாணவர் படிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.